# தமிழ்ச்சிட்டு

குரல் 23

இசை 11



தென்மொழி
இணைப்பு

நளி (நுவம்பர் - 2000)

சிறுவர் கலை
இலக்கியத் திங்களிதழ்

# புகைவண்டி விளையாட்டு ...

புகையில் லாமல் கரியில் லாமல்
போகுது வண்டி குப் குப் குப்!
வகைவகை யான வண்டித் தொடர்கள்
வருமாம் பின்னே குப் குப் குப்!

கடைசிப் பெட்டி சின்ன பெட்டி!
காலில் சிலம்பின் ஒலிகேட்கும்!
அட-அட-முன்னால் இழுபொறி ஒன்று
அந்தப் பிள்ளை மான் கன்று!

குச்சியில் கட்டிய செங்கொடி காட்டக்
குலுங்கி நின்றது தொடர்வண்டி.
பச்சைக் கொடியைக் காட்டினான் ஒருவன்!
பாம்பாய் நகர்ந்தது புகைவண்டி!

உரத்த குரலில் ஊதல் செய்தான்,
ஓங்கி வளர்ந்த ஒரு பையன்!
மரத்தைச் சுற்றிப் போனது வண்டி;
மணல் வெளி எங்கும் சுற்றிடுமாம்!

இடையில் இடையில் நின்றது வண்டி;
ஏறி இறங்கினர் பல பேர்கள்!
நடைதான்! இரும்புச் சக்கரம் இல்லை!
தண்ட வாளம் நடைபாதை!

கால்கள் வலித்தன; உடல்கள் சோர்ந்தன;
களைத்துப் போனது புகைவண்டி!
வாலைப் போலும் நீண்டிணைந் திருந்த
வண்டிகள் கழன்றன ஒவ்வொன்றாய்!

வெட்ட வெளியில் மாலைப் பொழுதில்
விளையா டுவமே புகைவண்டி!
கொட்டும் மழையில் கொளுத்தும் வெயிலில்
குப் குப் வண்டி செல்லாதே!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு

குரல் : 23, இசை : 11

தென்மொழி
நளி 2031 (நவம்பர். 2000)
இதழின் இணைப்பு

நிறுவனர்
பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துந் தொடர்புகளுக்கும்:
'தென்மொழி'
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை- 601 302
தொலைபேசி எண் : 227 0231

# ஆழ்ந்து விரிவாக அறிவோம்!

'அகல உழுவதை விட ஆழ உழு' - என்று பெரியவர்கள் சொல்லிய பழமொழி நமக்கு நினைவிருக்கும்.

அதாவது, பரப்பளவில் மிகுந்த நிலத்தை மேலோட்டமாக உழவு செய்வதைவிட, நிலப்பரப்பு குறைவாயினும் அதனை ஆழமாக உழுது பயிரிட வேண்டும் என்பதே அதன் பொருள்.

இளைஞர்களாகிய நாம் ஆழ்ந்து எதையும் செய்ய வேண்டும் என்பதற்காக நமக்கும் சிலர் இந்தப் பழமொழியைச் சொல்வதுண்டு.

அதாவது அதையும் இதையும் என்று நாம் நிறையப் பிடித்துத் தள்ளுவதைவிட, ஆழமாய் ஊன்றி ஏதாவது ஒன்றில் முழுத்திறம் பெற வேண்டும் என்பதே அதற்குப் பொருள்.

ஆழ்ந்த அறிவு என்பது மிகவும் முகாமையனதுதான். ஆனால் அதே வேளையில் உலகியல் நடப்புகளையும் நாம் கூடுதலாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உலக இயற்கை, அது இயங்குகிற முறைகள் பற்றியெல்லாம் நாம் நிரம்பத் தெரிந்து கொள்ள வேண்டும். கூடுதலாக இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு செயலைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்வதோடு, நமக்கு விருப்பமான துறைகளை ஆழ்ந்து படித்தல் வேண்டும்.

ஓடக்காரனும், பேராசிரியர் ஒருவரும் பற்றிய கதை நாம் அறிந்தது தானே.

ஓடக்காரன் ஒருவனுக்கு, பேராசிரியர் ஒருவருக்குத் தெரிந்த கல்வி அறிவு ஏதும் தெரியவில்லை. எனவே அவன் வாழ்க்கையையே இழந்து போய்விட்டதாகப் பேராசிரியர் கூறினார். பின்னர் ஓடம் தண்ணீர்ச் சுழலில் சிக்கிக் கொண்ட போது நீந்தத் தெரியாமல் அப்பேராசிரியர் நீரில் மாண்டு போனார்.

இந்தக் கதைவழி நாம் அறிந்து கொள்ள வேண்டியவை பல. இருந்தாலும், எல்லாவற்றிலும் நாம் ஈடுபட்டுத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் முகாமையானது.

ஒரு துறையில் மட்டுமே நம் கருத்துகளைக் குவிப்பது செக்கு மாட்டு ஓட்டம் போலாகி விடும்.

அவ்வகையில் அறிவுப் பரப்பை அகலவும், ஆழவும் உழுது கற்பதுதான் முறை.

எனவே, இளைஞர்களே எதையும் ஆழந்து விரிவாக அறிந்து கொள்வோம்.

**தமிழ் மண்ணின் பழமொழிகள் சில . . .**

- வெட்டி வேரில் விசிறியும்
  விலாமிச்சை வேரில் தட்டியும் பண்ணு
- வெந்தயம் போடாத கறியும் கறியில்லை;
  சந்தை இல்லாத ஊரும் ஊரில்லை!
- அடவிக்குச் சென்றும் விறகுக்குப் பஞ்சமா?
- ஏணைக் கழிக்குக் கோணல் கழியா?
- காடும் செடியுமில்லா ஊருக்கு
  கழுதை முள்ளி தெய்வ மரம்!
- செடியில் வணங்காததா, மரத்தில் வணங்கும்?
- பாரைக்கு ஊடாடாப் பாறை,
  பசுமரத்து வேருக்கு ஊடாடி விடும்!
- அத்திப் பூவைப் பார்த்தவரும் இல்லை,
  ஆந்தைக் குஞ்சைக் கண்டவரும் இல்லை!
- எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்ச இலை உதிராது!
- உடை மரத்தை வளர்த்தால் ஊரெல்லாம் முள்!

# வியப்பான செய்திகள் சில . . .

வாத்துகள், புழுப்பூச்சிகள் உண்ணியா நிலைத்திணை உண்ணியா - என்று தானே கடந்த இதழில் வினவினோம்.

இப்போது தெரிந்து கொள்வோமா?

ஒரு வாத்தைச் சுட்டு அதன் வயிற்றைக் கீறி நீங்களே பாருங்களேன்-- செய்தி இவ்வளவு எளியது என்று சிலர் நினைக்கிறார்கள்.

இவர்கள் காட்டு வாத்தின் வயிற்றில் கண்டனவெல்லாம் குளப் பூண்டுகள், ஒட்டுமுள் செடிகள், நாணல், பிற .சதுப்பு நிலைத் திணைகள் ஆகியவற்றின் விதைகள் மட்டுமே.

வாத்துக்களுக்குப் போதிய உணவு கிடைக்க வகை செய்யும் நோக்கத்துடன் வேட்டைப் பகுதிகளின் அலுவலர்கள் இத்தகைய நிலைத்திணை (தாவரங்)களைச் சதுப்பு நிலங்களில் ஏராளமாக வளர்த்தார்கள். காட்டு வாத்துகள் மீன்களையும் தவளை களையும் புழுக்களையும் நண்டு. நத்தை வகைகளையும் தின்பதை மக்கள் அடிக்கடி காணத்தான் செய்தார்கள். ஆனாலும் இந்த இரை தற்செயலானது என்றே கருதப்பட்டது. ஏனெனில், எத்தனை வாத்துகளின் வயிறுகளைக் கீறிப் பார்த்தாலும் சரி, இதன் எச்சங்களே அவற்றில் காணப்பட வில்லை.

ஒரு விலங்குக் காட்சிசாலைக்கு வந்து சேர்ந்த வாத்துகளைப் பார்த்து நாங்கள் எங்கள் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. அங்கு வந்து சேர்வதற்குமுன் இந்த வாத்துகள் ஒரு தொடர்வண்டி நிலையத்திலும் தொடர் வண்டியிலும் ஏறத்தாழ ஒன்றரை மாதம் இருந்தன. வழியில் அவற்றுக்கு மீன்களும் கோதுமையும் தவிர வேறு எதுவுமே இரையாகக் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும் வழிச்செலவின் போது மடிந்த சில தங்கக் கண் வாத்துகளை அறுத்துப் பார்த்தபோது அவற்றின் வயிறுகளில் நாங்கள் கண்டன வெல்லாம் குளப்பூண்டு விதைகள் மட்டுமே.

வாத்துகள் இந்த விதைகள் தவிர வேறு எதையும் உண்ண வில்லை என்பது நடக்கக் கூடியதா? அதிலும், நாற்பத்தைந்து நாள்களில் இவற்றைச் செரிக்கக்கூட அவற்றால் முடிய வில்லையே!


கடினமான இந்த விதைகளை வாத்துகளால் செரிக்க முடிய வில்லை என்பதே இவை அவற்றின் வயிறுகளில் இருந்ததற்குக் காரணம். பருக்கைக் கற்கள் போலவே இந்த விதைகளும் உணவை அரைப்பதற்கு உதவுகின்றன.

அப்படியானால் வாத்துகள் என்னதான் தின்கின்றன?

நீர்ப் பறவைகளில் செரிமான உறுப்புகளில் விலங்குணவு

அடையாளம் எதுவுமே காணப் படாதது ஏன் என்று விலங்குக் காட்சிச் சாலையில் திட்ட வட்டமாகத் தெரிந்து கொள்ள நாங்கள் முடிவு செய்தோம்.

கவனமாகக் கட்டுப் படுத்தப் பட்ட உணவுப் பொருள்களைச் சில ஆண் காட்டு வாத்துகளுக்கு இரையாகக் கொடுத்து அவற்றை வெவ்வேறு இடைவேளைகள் விட்டு ஒவ்வொன்றாக அறுத்து அவற்றின் வயிறுகளிலும் குடல்களிலும் என்ன இருக்கிறது என்று ஆராய்ந்தோம்.



முதல் வாத்து இரையெடுத்த இருபது நிமையங்களுக்குப்பின் அறுக்கப்பட்டது. அது உண்ட மீன்கள், மண் புழுக்கள், நண்டு நத்தைகள் ஆகியவற்றின் அடையாளமே அதன் வயிற்றில் தென்படவில்லை. இரண்டாவது வாத்து இரையெடுத்த கால் மணி நேரத்திற்குப் பிறகும் மூன்றாவது பத்து நிமையங்கள் கழித்தும் அறுக்கப்பட்டன.

வியப்பூட்டும் வகையில் அதே விளைவு நேர்ந்தது: பறவைகள் உண்ட இரையின் எச்சமே அவற்றின் வயிறுகளில் காணப்பட வில்லை. சாண்டர் என்கிற மீனின் செதில்களைச் செரிக்க மற்ற விலங்குகளுக்கு நீண்ட நேரம் பிடிக்கும். ஆனால் வாத்துகளின் வயிறுகளிலோ, ஒரு செதில்கூட இல்லை.

வாத்துகள் வியக்கச் செய்யும் விரைவுடன் உணவைச் செரித்து விடுவதுதான் அவற்றின் இரை பற்றிய தவறான கருத்துகளுக்குக் காரணம்.

வாத்துகளின் உணவில் பல நிலைத்திணைகள் ஐயமின்றி உண்டு. ஆயினும் நீர்ப்பூண்டுகளின் கடினமான விதைகளை மட்டும் இரையாகப் போட்டால் வாத்துகள் விரைவிலேயே இறந்துபோகும்.

மாலையில் காட்டு வாத்துகள் புல்தரைகளுக்கோ காட்டோர வெளிக்கோ பறந்து சென்று மங்கலில் வெளிவரும் மண்புழுக்களை ஏராளமாகத் தின்னும்.

வாத்து விழுங்கிய இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் மண்புழு அதன் இரைப்பை நீரில் கரைந்துவிடும். புழுவின் குடலில் நிறைந்திருந்த கரு மண் மட்டுமே எஞ்சியிருக்கும்.

# புற அகக் கோள்கள்

கதிரவ மண்டலத்தில் உள்ள கோள்களை உள்ளகக் கோள்கள் என்றும், புற அகக் கோள்கள் என்றும் இரண்டாகப் பகுத்திருப்பதாக நாம் அறிந்தோம்.

அறிவன்(புதன்), வெள்ளி, உலகம், செவ்வாய் ஆகிய இந்த நான்கு கோள்களும்தாம் உள்ளகக் கோள்கள் என்பதையும் நாம் தெரிந்து கொண்டோம்.

அதை அடுத்து வியாழன், காரி, விண்மம் (யுரேனீசு), நெடுமம், (நெப்டியூன்), சேண்மம் (புலுட்டோ) ஆகியவையே புற அகக் கோள்கள்.

இந்த உள்ளகக் கோள்களுக்கும், புற அகக் கோள்களுக்கும் இடையில் கோடிக்கணக்கான விண்கற்கள் 'உடுக்கூட்டம்' போல் செறிந்து காணப் படுகின்றன.

இந்த உடுக் கூட்டத்தை அடுத்து உள்ளது 'வியாழன்' கோள். இதுவே கதிரவ மண்டலத்துள் மிகப்பெரிய கோளாகும். இதையடுத்து உள்ள காரி கோளை வலையம் போன்று விண்கற்கள் சூழ்ந்தது.

புறஅகக் கோள்களான வியாழனும், காரியும், விண்மமும், நெடுமமும் வளிமண்டலத்தால் சூழப்பெற்றுள்ளன.

நீர் வளியும், 'நவச்சார' வளியும், கரிம வளியும், கதிர்ம (ஈலியம்) வளியும் அடைந்த வளியே இந்த வளி.

அத்தகைய வளி அடைவுகளுக்குள் கற்பாறைகளே மிகுந்த அளவில் இந்தக் கோள்களில் இருக்கின்றன.

1930 - ஆம் ஆண்டளவிலேயே கண்டு கொள்ளப்பெற்ற சேண்மம் (புலுட்டோ) கோளும் பெரும்பகுதி பாறைகளாகவே இருக்கிறது.


இருந்த போதும், அதன் வளி மண்டலத்துள் 'மீத்தேனே' அதிகமாக இருக்கிறது.

இவ்வாறு நம்பியின் தந்தை சொல்லச் சொல்ல ஆர்வமாய்க் கேட்டுக் கொண்டிருந்தனர் குழலியும் எழிலும்.

# முயல்

முயலைப் பற்றிய பல கதைகளை நீங்கள் படித்திருப்பீர்கள். இது மிகவும் தந்திரமுள்ள சிறு விலங்கு.

முயல்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று, காட்டுமுயல் (Hare), மற்றொன்று குழிமுயல் (Rabbit) காட்டுமுயல் உருவில் சற்றுப் பெரியது. இது பழுப்பு நிறமாயிருக்கும். மற்ற விலங்குகள் போலன்றி, இதன் மேலுதடு பிளவுப்பட்டிருக்கும். காதுகள் நீளமனவை. அவற்றை எந்தத் திசையிலும் இது திருப்பும். சிறு ஒலி கேட்டாலும் அதை அறிந்து ஓடிவிடும். இதற்கு மோப்ப ஆற்றலும் பார்வைத் திறனும் மிக அதிகம். இதன் முன்கால்களைவிடப் பின்கால்கள் நீளமானவை. இதனால், பின்கால்களை உந்தித் தள்ளி மிக வேகமாகக் குதித்துக் குதித்து ஓடும். வேட்டைநாய்கள் துரத்தும்போது, பல தந்திரங்களைக் கடைப்பிடித்து, விரைவில் தப்பியோடிவிடும்.



புல்பூண்டுகள், பயறுவகைகள், மரப்பட்டைகள் முதலியவற்றை இது தின்னும். இவற்றைக் கொறித்துத் தின்பதற்கேற்ப இதன் பற்கள் கூர்மையாக இருக்கும். பற்கள் தேயத்தேய மீண்டும் வளரும். தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் முயல் மிகுந்த இழப்பை விளைவிக்கிறது. பயறுகள் முளைக்கும்போதே இரவில் வந்து அவற்றைத் தின்றுவிடும். இது ஆண்டுக்கு மூன்று நான்கு தடவை குட்டிபோடும். ஒரு தடவைக்கு நான்கு ஐந்து குட்டிகள் பிறக்கும். காட்டு முயலை மக்கள் வேட்டையாடி உண்பர்.

குழிமுயல் அதன் பெயருக்கேற்பக் குழி தோண்டி அதில் வாழும். இதை வீட்டில் செல்லப் பிள்ளையாக வளர்ப்பார்கள். இது குதித்துக் குதித்து ஓடுவதைக் காண வேடிக்கையாக இருக்கும்.

சிலவகைக் குழிமுயல்களை அவற்றின் முடிகளுக்காக வளர்க்கிறார்கள். இவற்றுள் 'அங்கோரா' என்ற இனம் முதன்மையானது. இதன் நீண்ட மயிர்களைக் கத்தரித்து, இழையாகச் செய்து ஆடை நெய்கிறார்கள். மென்மயிர் ஆடை (Fur) நெய்யவும், கவிப்புகள் (Felt Hats) செய்யவும் குழிமுயல்களின் தோல் பயன்படுகிறது. இறைச்சிக்காகவும் சிலவகைக் குழிமுயல்களை வளர்க்கிறார்கள்.

# வெண்பிறவிகள்

வெண்பிறவிகள் (Albino) சில விலங்குக் காட்சி சாலைகளில் வெள்ளை மயிலைப் பார்க்கலாம். இதுபோலவே, வெள்ளை நிறக் காக்கைகளும் சில அரிதாகக் காணப்படுவது உண்டு. இவ்வாறு, இயல்பான நிறமல்லாது, வெள்ளை நிறம் பெற்றுள்ளவையே வெண்பிறவிகள்.

விலங்குகளிலும் வெண்பிறவி உண்டு, ஆப்பிரிக்கக் கண்டத்தில் வெள்ளை ஒட்டகச்சிவிங்கிகள் சில வாழ்கின்றன. அணில்களில் சில வெள்ளைநிறத்தில் உள்ளன. வெள்ளை நிறத்தில் மான்கள் கூட இருக்கின்றன. இவை யாவும் மிக அரிதாகவே காணப்படுபவை.

மக்களிலும் வெண்பிறவித் தன்மை உள்ளவர்கள் சிலர் உண்டு. இவர்கள் அதிக வெண்மை நிறமாக இருப்பார்கள். தலை மயிர் வெண்மையாகவோ செம்பட்டையாகவோ இருக்கும். கண் செம்பழுப்பு நிறமாக இருக்கும்.

இந்த வெண்பிறவித் தன்மைக்குக் காரணம் என்ன தெரியுமா? நம் தோலில் உள்ள உயிரணுக்களில் கருப்பு நிறமுள்ள மிக நுண்ணிய துகள் உண்டு. இதற்கு நிறமிகள் (மெலனின்) என்று பெயர். இந்த நிறமித்துகளே நம் உடலுக்கு நிறத்தைக் கொடுக்கிறது. பிறவியில் ஏற்படும் சில குறைகளால் சிலருக்கு இந்த நிறமிகள் இருப்பதில்லை. எனவே அவர்களுடைய உடலும் முடியும் வெள்ளையாகத் தோன்றுகின்றன. இந்தக் குறை சிலருக்குப் வழிமுறையாகவும் தொடரக்கூடியது.

நிலைத்திணைகளிலும் சிலசமயம் வெண்பிறவித்தன்மை ஏற்படுவது உண்டு. பச்சையம் இல்லையெனில் இலை வெண்மையாக மாறிவிடும். வயல்களில் சில வெள்ளை நாற்றுகளைக் காணலாம். இலைகளில் பச்சையம் இல்லாததால், உணவை உருவாக்கிக் கொள்ள இயலாமல் அவை வாடிவிடுகின்றன.

# கேட்டால் உய்வாய்!

**பாவலர் இளஞ்சித்திரன்**

சொல்வதைக் கேள்நீ; கேட்டால் உய்வாய்!
சோம்பல் இருந்தால் தாழ்வாய்!
வெல்வதற் கொருவழி; பெரியோர்ப் போற்றல்!
வெட்டியென் றாலிதை வீழ்வாய்!

பட்டறி வாளர் பெரியோர் சொற்கள்;
பாடம் என்றுணர்ந் திடுவாய்!
விட்டெறிந் தாற்போல் அவரைப் பேசின்
வீழ்வ தோடிலை; கெடுவாய்!

கெட்டுப் போக ஏனவர் சொல்வார்?
கீழ்மை மனத்தரா அவர்கள்?
கொட்டுப் படுதல் வேண்டும் நீயும்!
கொட்டுப் பட்டால் தெரியும்!

தாம்படும், பட்ட துன்பம் தவிர்க்கத்
தானடா அவர்கள் சொல்வார்!
ஏன்பட வேண்டும் அதனை நீயும்?
என்பதற் கன்றோ சொல்வார்!

கேட்டால் உய்வாய்! நல்வழி காண்பாய்!
கிட்டிடும் வெற்றிகள் தானே!
பாட்டால் சொன்னேன்; படிப்பினை கொள்வாய்!
பாவலன் என்சொல் தேனே!

## சொல்லடை விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 செ | ங் | 2 கு | ட் | டு | 5 வ | ன் | பா 7 |
| ம் | த | 3 ம | லை | யா | ள | ம் | ண |
| மை | 4 சா | ரி | யை | 6 கு | ம | ண | ன் |
| 8 ஆ | தி | க் | க | ம் | னை | ன் | பு 10 |
| ள | த் | 9 க | ம் | ப | ள | ம் | ன் |
| ம 11 | 12 க | ண் | மை 13 | ம் | மா | ட | ன |
| ஞ் | 14 அ | ட | வி 15 | ல | ங் | கு 16 | கை |
| 17 சி | ன | ம் | ல் | க 18 | ங் | ட | மு 19 |

## சொல்லடை - ஔவை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 5 | | 7 |
| | | 3 | | | | | |
| | 4 | | | 6 | | | |
| 8 | | | | | | | 10 |
| | | 9 | | | | | |
| 11 | 12 | | 13 | | | | |
| | 14 | | 15 | | | 16 | |
| 17 | | | | 18 | | | 19 |

### இடமிருந்து வலம்

1. வடபுலக் கனக விசயரை வென்ற வேந்தன் (7)
3. தமிழிய மொழிகளுள் ஒன்று (5)
4. இஃதோர் இடைச்சொல் (3)
6. தமிழுக்குத் தலை கொடுத்த வள்ளல் (4)
8. ஆளுமையைக் குறித்திடும் ஒழிக்க வேண்டிய வடசொல் (5)
9. முடியால் நெய்யப்பட்ட தரை விரிப்பு (5)
11. பெண் தன்மை (4)
12. விழி (2)
13. எருமை (3)
14. அடர்ந்த காடு (3)
15. ஐயறிவுடைய உயிரி (4)
16. மலை முழை (2)
17. வெகுளி (3)

### மேலிருந்து கீழ்

1. சிவப்பு (3)
2. கடலுள் மறைந்த பெருங்கண்டம் (8)
4. கொடிய இவ்வழக்கம் ஒழிய நாம் உழைக்க வேண்டும் (2)
5. பெருமாளிகை (4)
6. தமிழ் மாதங்களில் ஒன்று (4)
7. இசைவாணன் (3)
8. கூலியின்றி வாங்கும் கட்டாய வேலை (5)
10. புன்சிரிப்பு (4)
15. சேரன் இலச்சினை (2)

### வலமிருந்து இடம்

3. நிறுவனமான சமயம் (3)
4. தவசங்களில் ஒன்று (2)
10. ஒருவகை மரம் (3)
19. கடிதம் (5)

### கீழிருந்து மேல்

14. கீரை வகைகளுள் ஒன்று (4)
16. நீர் கொள்கலம் (3)
18. கப்பல் (3)
19. அரும்பு (2)

(விடை 10ஆம் பக்கம்)

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி
டிஎன். சிப் பி.எம்.சி 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி இணைப்பு

# அறிவின் எல்லை

குயிலைப் போல கூவிப் பார்த்தேன்
கூவ முடிகிறது - நான்
மயிலைப் போல ஆடிப் பார்த்தேன்
ஆட முடிகிறது

மீனைப் போல நீந்திப் பார்த்தேன்
நீந்த முடிகிறது - நான்
மானைப் போல ஓடிப் பார்த்தேன்
ஓட முடிகிறது

முடியும் என்று முயன்று பார்த்தேன்!
எல்லாம் முடிகிறது - நீயும்
முடியும் என்று முயற்சி செய்தால்
இருளும் மடியுமது!

முயற்சி திருவினை ஆக்கம் என்றால்
மூத்தோர் சொல்லமுது - நீயும்
அயற்சி இன்றிக் கடைப்பிடித்தல்
அறிவின் எல்லையது!

- புதுவை. தமிழ்நெஞ்சன்

# விடுகதைகள் சில....

1. ஊருக்கெல்லாம் ஒரே விளக்கு? - அது என்ன?
2. செம்பு நிறைய 'கெம்பு' - அது எது?
3. சின்ன கிணற்றில் கிண்ணம் தண்ணீர் - அது எது?
4. உயரக் கிளையில் உரல் கட்டித் தொங்குகிறது - எது அது?
5. கழுத்து உண்டு - தலை இல்லை
   கை உண்டு - விரல் இல்லை
   உடல் உண்டு - உயிர் இல்லை - அது எது?
6. உயர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ - அது என்ன?
7. ஊசி முனையில் ஒப்பாரி இசை - அது எது?
8. ஒளியில் பிறந்ததை
   இருட்டில் பார்க்கிறோம் - அது எது?

**விடைகள்**

1. கதிரவன் 2. மாதுளம் பழம் 3. இளநீர் 4. பலாப்பழம்
5. சட்டை 6. குடை 7. இசைப்பெட்டி (கிராமபோன்) 8. திரைப்படம்